[28th April 1960

Indiscipline among students.

* 855 Q.—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா:

(அ) மாணவர்களிடையே ஒழுங்கீனம் கட்சிச்சண்டை போன்றவற்றிக்குக் காரணமாகவிருக்கும் மாணவர் யூனியன்களையும், அது சம்பந்தமாய் நடைபெறும் தேர்தல்களையும் நிறுத்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் முயற்சி என்ன?

(ஆ) அரசியல் கட்சிகள் மாணவர் விஷயத்தில் தலையிடாதிருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும்?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) & (ஆ) Government do not consider that any direct action is called for on their part now in respect of the functioning of the students' unions. The question of establishing a convention among the political parties in the State about their non-interference in students' activities has been discussed by the State Education Advisory Committee. But no agreed conclusions have emerged as a result of these discussions. Government are considered what further steps they should take in the matter in the light of these discussions.

* SRI A. VEDARATHNAM : மாணவர்கள் அரசியல் முறையில் சங்கம் சேருவதைக் காட்டிலும் அவர்கள் மாணவர் மன்றம், தமிழ் மன்றம் என்று இப்பொழுது வைத்து நடத்துகிறார்கள். இப்படி, விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், இந்தி மண்டல், இது போன்ற சங்கங்கள் ஆரம்பித்து அந்தத் துறைகளில் மாணவர்கள் கவனத்தைத் திரும்பும்படியான முயற்சியை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அம்மாதிரிப் பட்ட சங்கங்கள் இருக்கின்றன. அதற்குப் புறம்பாக வெளியில் அரசியல் கட்சிகள் மாணவர்கள் சங்கங்களை அமைக்கக்கூடாது என்று இப்பொழுது பேச்சு நடந்து வருகிறது. அதில் இன்னும் ஒரு முடிவு காணமுடியவில்லை.

SRI M. KALYANASUNDARAM : இந்தக் கேள்வி ஸ்டுடன்ஸ் யூனியனைப் பற்றியது. ஒவ்வொரு கல்லூரியிலும் பல மாணவ மன்றங்கள் இருக்கின்றன. மொழி அடிப்படையிலும் இருக்கின்றன, மற்ற துறைகளிலும் இருக்கின்றன. அந்த மன்றங்களையே தடை செய்யவேண்டுமென்றுதான் இந்தக் கேள்வியில் இருக்கிறது. அப்படிப்பட்ட மன்றங்களை தடை செய்யும் உத்தேசம் சர்க்காருக்குண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படிப்பட்ட சங்கங்கள் இப்பொழுது நடந்து வருகின்றன. அவை நல்ல முறையில் நடைபெறுகின்றன. அதில் அரசியல் கட்சிகள் போய் புகுந்து கொள்ளக் கூடாது என்பதுதான் அங்கத்தினர் கேள்வியின் கருத்து. அப்படி புகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். வெளியில் மாணவர்கள் கட்சிகளில் சேரக் கூடாது, அப்படி மாணவர்களை கட்சிகள் சேர்க்கக் கூடாது என்ற விஷயம் பற்றித்தான் சொல்லியிருக்கிறேன்.

28th April 1960]

SRI K. ANBAZHAGAN : கல்லூரிகளில் நடைபெறுகிற மாணவர்கள் மன்றம் எதுவாகயிருந்தாலும் அதில் அரசியல் கட்சிகள் புக முடியாது என்பது கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா? அதேபோல் மாணவர்களிடையே ஒழுங்கை நலை நிறுத்த அந்த மன்றங்கள்தான் வழி செய்கின்றன என்பதையும் உண்மையில் மாணவர்களை ஒழுங்கான சிந்தனைக்கு உட்படுத்துகிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கல்வி இலாக்காவிற்கு அறிவித்து மன்றங்கள் நிலைக்க வழி செய்வாரா?

THE HON. SRI C. SUBRAMANIAM : வெளிப்படையாக புக முடியாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் சில அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி மாணவர்கள் என்ற முறையில் பல கல்லூரிகளில் நிறுத்தி வைத்து அதற்காக அரசியல் கட்சித் தலைவர்கள்கூட வேலை செய்து நிலைமையை சீர்குலைத்து வருகிறார்கள் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRI A. VEDARATHNAM : அரசியல் கட்சிகளுக்குள்ளே நம் மாநிலம் சம்பந்தப்பட்டவரையில் இங்குள்ள அரசியல் கட்சிகளிடையே இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதம் இல்லை என்று தெரிவதால் அபிப்பிராய பேதம் இந்த மாநிலத்திற்கு வெளியேயிருந்து வருமானால் அதைப் பொருட்படுத்தாமல் இந்த மாநிலத்தில் ஏகோபித்து வந்திருக்கிற இந்த அபிப்பிராயத்தை பயன்படுத்திக் கொண்டு இதில் ஒரு முடிவிற்கு வர அரசாங்கம் முன் வருமா?

THE HON SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். நம் ராஜ்யத்திலுள்ள அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் இது சரியானது என்று ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் ஒரு கட்சியைப் பொறுத்தவரையில் அது அகில இந்திய ரீதியில் இருப்பதால், அகில இந்திய அடிப்படையில் இருப்பதால் வேறு பாகங்களில் நடந்த நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு இங்கு இம்மாதிரி செய்யக்கூடாது என்று அக்கட்சி கருதுகிறது. அக்கட்சி அகில இந்திய ரீதியில் இருப்பதால் அவர்கள் அபிப்பிராயம் என்னவாகயிருந்தாலும், அதை இங்கு நடவடிக்கைக்கு கொண்டு வர கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

MR. SPEAKER : Mr. C. Natarajan.

(The hon. Member was seen using the mike before Sri K. Vinayakam, which was not working.)

SRI K. VINAYAKAM : It will answer only to me!

MR. SPEAKER : He does not want a loudspeaker at all.

SRI C. NATARAJAN : மாணவர் யூனியன்கள் மாணவர் சம்பந்தப்பட்டவை. அவர்கள் விரும்பினால் எந்தக் கட்சித் தலைவரும் வரலாமென்று விதியிருக்கிறதா? அந்த விதியை சில யிடங்களில் நிறுத்தி வைத்திருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அதை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

[28th April 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: பல கட்சித் தலைவர்கள் அங்கு போகிறார்கள். அப்படி தலைவர்கள் போவதில் அரசாங்கத்திற்கு எவ்விதமான ஆட்சேபனையும் கிடையாது. தலைவர்கள் அங்கு போகும்போது பொறுப்பாக பேசுகிறார்கள் என்பதை நானும் உணர்கிறேன். இதிலுள்ள முக்கிய கஷ்டம், மாணவர் மன்றங்கள் சிலவற்றில் கட்சிசார்பில் சில பேர்கள் நிறுத்தி வைக்கப்பட்டு அதில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வேலை செய்கிறார்கள் என்ற தகவல் சர்க்காருக்கு வந்திருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM: "ஆன் எ பாயிண்ட் ஆப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன்". அமைச்சர் அவர்கள் ஒரு அகில இந்தியக் கட்சி இதை ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சிதான் அதை ஒத்துக்கொள்ளவில்லை என்பதை இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அவர் பதில் சொல்லும்போது, கம்யூனிஸ்ட் கட்சியினர், இம்மாநிலத்தில் இருக்கிறவர்கள் ஒரு அபிப்பிராயம் வைத்திருப்பதாகவும், கேரளாவில் அவர்கள் அதை ஒத்துக் கொள்ள இயலவில்லை என்றும் அர்த்தம் வருவதுபோல் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நடக்கும் விவாதங்களை இவ்வளவு நுட்பமாக கவனித்து சொல்லியிருந்தாலும் அது தவறு என்பதை இங்கு சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் கவனித்து சொல்லவில்லை. அங்கத்தினரிடமிருந்து தெரிந்துதான் சொன்னேன்.

MR. SPEAKER: I would like to tell hon. Member one thing. In putting supplementaries, the hon. Member who puts the main question generally has preference and can put two or three supplementaries. Then I give chance to others. If new members want to put supplementaries, I allow them also. But what I deprecate is the attempt on the part of individual members to monop lise the Question Hour. I regret, therefore, I cannot allow them all to ask questions. I am the final authority to decide whether enough number of supplementaries have been put on any particular question. If hon. Members go on raising their hands, I am afraid I cannot call all of them. I do not want individual members to monopolise the Question Hour.

Women's Education

*856 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா?

(அ) பெண்கள் கல்வியை விஸ்தரிக்கவும், அபிவிருத்தி செய்யவும், ஆலோசனை தெரிவிப்பதற்காகவும், கொள்கைகள், திட்டங்கள் வகுப்பதற்காகவும், சென்னை ராஜ்யத்தில் பெண்கள் அடங்கிய தேசியக் கவுன்சில் ஒன்றை நிறுவுவது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனை ஏதாவது நடத்தப்பட்டு வருகிறதா?

(ஆ) அவ்வாறு பரிசீலனை ஏதாவது நடத்தப்பட்டுவரின் விவரங்கள் யாவை?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) Yes, Sir.

(ஆ) The proposal is still under examination.